## ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பள்ளப்பட்டி

### ஆறாம் வகுப்பு அறிவியல் பருவம்-1 அலகு-2 விசையும் இயக்கமும்

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வேகத்தின் அலகு ________________

அ. மீ ஆ. விநாடி இ. கிலோகிராம் ஈ. மீ / வி

2. கீழ்க்கண்டவற்றுள் எது அலைவுறு இயக்கம்?

அ. பூமி தன் அச்சைப் பற்றிச் சுழலுதல்

ஆ. நிலவு பூமியைச் சுற்றி வருதல்

இ. அதிர்வுறும் கம்பியின் முன்பின் இயக்கம்

ஈ. மேற்கண்ட அனைத்தும்

3. கீழ்க்கண்டவற்றுள் சரியான தொடர்பினைத் தேர்ந்தெடு

அ. வேகம் = தொலைவு x காலம்

ஆ. வேகம் = தொலைவு / காலம்

இ. வேகம் = காலம் / தொலைவு

ஈ. வேகம் = 1 / (தொலைவு x காலம்)

4. கீதா தன் தந்தையுடன் ஒரு வண்டியில் அவளுடைய வீட்டிலிருந்து 40 கிமீ தொலைவிலுள்ள அவளது மாமா வீட்டிற்குச் செல்கிறாள். அங்கு செல்வதற்கு 40 நிமிடங்கள் எடுத்துக்கொண்டாள்.

கூற்று 1: கீதாவின் வேகம் 1கிமீ / நிமிடம்

கூற்று 2: கீதாவின் வேகம் 1 கிமீ / மணி

அ. கூற்று 1 மட்டும் சரி

ஆ. கூற்று 2 மட்டும் சரி

இ. இரண்டு கூற்றுமே சரி

ஈ. இரண்டு கூற்றுகளும் தவறு

II. சரியா? தவறா? என எழுதுக

5. மையப்புள்ளியைப் பொறுத்து முன்னும் பின்னும் இயங்கும் இயக்கம் அலைவு இயக்கம் ஆகும். ____________

6. அதிர்வு இயக்கமும், சுழற்சி இயக்கமும் கால ஒழுங்கு இயக்கமாகும். ____________

7. மாறுபட்ட வேகத்துடன் இயங்கும் வாகனத்தின் இயக்கம் ஒரு சீரான இயக்கமாகும். ____________

8. வருங்காலத்தில் மனிதர்களின் பதிலியாக ரோபாட்டுகள் செயல்படும். ----------------------------

LIVEWORKSHEETS

### III. கோடிட்ட இடங்களை நிரப்புக.

9. சாலையில் நேராகச் செல்லும் ஒரு வண்டியின் இயக்கம் ____________ இயக்கத்திற்கு உதாரணமாகும்.

10. புவிஈர்ப்பு விசை ____________ விசையாகும்.

11. மண்பாண்டம் செய்பவரின் சக்கரத்தின் இயக்கம் __________ இயக்கமாகும்.

12. ஒரு பொருள் சமகால இடைவெளியில் சம தொலைவைக் கடக்குமானால், அப்பொருளின் இயக்கம் ____________ இயக்கம் ஆகும்.

விடைகள்: சீரான நேர்க்கோட்டு சுழற்சி தொடா

### IV. பொருத்துக.

| | | |
|---|---|---|
| 13. சறுக்குமரம் | - | நேர்க்கோட்டு இயக்கமும் சுழற்சி இயக்கமும் |
| 14. பம்பரம் | - | நேர்க்கோட்டு இயக்கம் |
| 15. ஊஞ்சல் | - | சுழற்சி இயக்கம் |
| 16. கார் செல்லுதல் | - | அலைவு இயக்கம் |

### V.ஒப்புமையின் அடிப்படையில் நிரப்புக

17. பந்தை உதைத்தல் : தொடுவிசை :: இலை கீழே விழுதல் : ____________

18. தொலைவு : மீட்டர் : : வேகம் : ________________

19. சுழற்சி இயக்கம் : பம்பரம் சுற்றுதல் :; அலைவு இயக்கம் : ____________

20. கடிகார ஊசல் : அலைவு இயக்கம் :: மீன் நகர்தல் : __________________

விடைகள்: மீட்டர்விநாடி தொடா விசை ஊஞ்சலின் இயக்கம் ஒழுங்கற்ற இயக்கம்

LIVEWORKSHEETS